## சுருக்கம்

சாலைகள் மேம்பாடு - பேரூராட்சிகள் துறை பேரூராட்சிகளிலுள்ள மிகவும் பழுதுபட்ட சாலைகளை மேம்பாடு செய்ய ரூ.20.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்படுகிறது

---

## நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை

அரசாணை (2டி) எண்.12 நாள் 20.02.2004

பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித எண். 10676/2003/டி3 நாள். 22.01.2004

****

ஆணை

பேரூராட்சிகளிலுள்ள மண்சாலைகளை தார் சாலைகளாகப் படிப்படியாக மாற்றம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 11.06..2001 தேதிய ஆய்வுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

2.படிக்கப்பட்ட கடிதத்தில், பேரூராட்சிகள் இயக்குநர் அவர்கள் தற்போது பேரூராட்சிகளில் 1298.371 கி.மீ. செம்மண் சாலைகளும் 3556.864 கி.மீ. மண் சாலைகளும் உள்ளன என்றும் இவற்றில் முக்கியமான மற்றும் மிகவும் பழுதுபட்ட மண்சாலைகள் மற்றும் செம்மண் சாலைகள் 875 கி.மீ உள்ளது கண்டறியப்பட்டுள்ளது என்றும் அவற்றுள் பல சாலைகள் சில ஆண்டுகளாகத் தொடர்ந்து பராமரிக்க முடியாமல் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக உள்ளன என்றும் அவைகளைப் பழுது பார்த்தல் அவசியம் என்றும், பெருவாரியான பேரூராட்சிகள் நிதி நலிந்த நிலையில் உள்ளதால் இப்பணிகளை மேற்கொள்ளத் தேவையான நிதி வசதி இல்லை என்றும் எனவே அச்சாலைகளை மேம்படுத்தும் பணிகளுக்காக ரூ.6125.00 இலட்சம் தேவைப்படுகிறது என்றும் அதனை விரைந்து ஒதுக்கீடு செய்து தருமாறும் அரசைக் கோரியுள்ளார்.

3.மேலே பத்தி ஒன்றில் உள்ள பேரூராட்சிகள் இயக்குநரின் செயற்குறிப்பை அரசு கூர்ந்தாய்வு செய்தது. ஆய்வுக்குப்பின் பேரூராட்சிகளின் இயக்குநரின் செயற்குறிப்பின் அடிப்படையில் நிதி நலிவடைந்த நிலையுலுள்ள பேரூராட்சிகளில் மிகவும் பழுதுபட்ட நிலையிலுள்ள சாலைகளை சீர் செய்து மேம்படுத்துவதற்கு ரூ.20.00 கோடி (ரூபாய் இருபது கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை வெளியிடுகிறது.

4.மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும் 2515-00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் 193-நகர்ப்புற உள்ளாட்சிஅமைப்புகள் அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி பத்தாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் 11 மாநிலத் திட்டம் **JA-**

பேரூராட்சிகளுக்கான சிறப்புத் திட்டம் -09-உதவிமானியங்கள் 02 மூலதனச் செலவுகளுக்கான மான்யங்கள் (DPC எண்.2515 00 193 **JA** 09 28)

5..2003-2004க்கான இறுதி திருத்திய ஒதுக்கீட்டில் (FMA) தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதற்குரிய அடையாள நிதி ஒதுக்கீடு 2003-2004ஆம் ஆண்டிற்கான இறுதித்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திருத்திய நிதி ஒதுக்கீடு சம்பந்தமான செயற்குறிப்பை நிதித்துறைக்க உரிய காலத்தில் அனுப்பி வைக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6.மேலே பத்தி இரண்டில் அனுமதிக்கப்பட்ட தொகையினை பேரூராட்சிகளின் இயக்குநர் பெற்று, நிதி நலிவடைந்த நிலையிலுள்ள பேரூராட்சிகளில், மிகவும் பழுதடைந்த முக்கிய சாலைகளில் சீர் செய்து மேம்படுத்துவதற்கு பிரித்தளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7.இக்கோப்பு நிதித்துறையின் அ.சா.கு.எண்.11997/ந.நி(ம) கு.வ.2004 நாள். 20.02.2004ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எல்.என்.விஜயராகவன்,
அரசுச் செயலாளர்

பெறுநர்

பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை-108
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-1
முதன்மை மாநில கணக்காயர், (தணிக்கை-1) சென்னை-18
மாநில கணக்காயர் (தணிக்கை -2) சென்னை-35

நகல்:-

மண்டல பேரூராட்சிகளின் இயக்குநர்கள்
நிதி (நநி(ம) கு.வ). /பிஜி-2/சென்னை-9
நநி(ம) கு.வ (வ.செ) துறை சென்னை-9
இ.கோப்பு/ உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்